
கப்பலோட்டி - செக்கிழுத்த
செம்மல்

# வ. உ. சி.



...தம் : 20/-

"ஈழவேந்தன்"

## நினைவு வெளியீடு

வாழ்விடத்தைக் காத்து வண்டமிழை வாழ்வித்த மறைந்தும் மறையாத மாவீரன் வன்னியசிங்கம் அவர்களின் திருவடிகளில் இந்நூலினை வைத்து வழுத்தி வாழ்த்துகிறேன்.

…ழும்பு தமிழ்ச் சங்க நூலகம்

## அணிந்துரை.

---

தாய் நாட்டின் விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணித்து அல்லல் பல ஏற்ற வீரத்தியாகி வ. உ. சியின் வழியே, இன்று வாழ்விழந்து வகையறியாது தத்தளிக்கும் ஈழத் தமிழினத்திற்கு வாழ்வு அளிக்கக்கூடிய நெறியாகும். பக்தர்களைப் போற்றுவதன் பலன் நாமும் முத்தி பெறுவதாயிருந்தால் விடுதலை வீரரை வழுத்துவதன் பலன் நாமும் விடுதலை பெறுவதாகத்தான் இருக்கவேண்டும். சுதந்திரமே மூச்சாக, சுதேசிக் கப்பலோட்டிய சிதம்பரம் பிள்ளையின் வாழ்வு நம் வாலிபர் சமுதாயத்திற்கு கலங்கரை விளக்கமாக உரிமைத்துறை சேர உதவும் என்ற எண்ணமே தம்பி 'ஈழவேந்தனை' இச் சிறு நூலைப் படைக்கத் தூண்டியிருக்கிறது.

மாண்ட ஓர் அயர்லாந்து தேசபக்தனின் 'சவ' அடக்கத்தின்போது இன்னொரு தேசபக்தன் கூறுகிறான். ''மரணத்திலிருந்து வாழ்வு தளிர்க்கின்றது. தேசபக்தர்களின் கல்லறைகளிலிருந்தே உரிமை பெற்ற இனங்கள் உயிர்த்தெழுகின்றன.'' இன்று ஓர் புதிய பாரதம் உயிர்கொண்டு எழுந்து நிற்கிறதென்றால் அப்பாரதத்தின் பிறப்பிடம் சிதம்பரம்பிள்ளை போன்றவர்களின் கல்லறைகளே. இலங்கை வாழ் தமிழினம் மீண்டும் விழித்தெழவேண்டுமானால் உரிமைப் போரில் தம்மை அர்ப்பணித்த ஆயிரம் ஆயிரம் வீரர்களின் கல்லறைகளை நாம் காணவேண்டும். ஒரு போராட்டத்திலோ, ஒரு சிறு கஷ்டத்துடனோ பெற்றுவிடக் கூடியதல்ல சுதந்திரம்.

கப்பலோட்டிய தமிழனின் வாழ்வை உணர்ச்சி மிக்க நடையில், எம்முன்காட்டி, எம் சிந்தனையை அவ்வழியில் திருப்பிய ஈழவேந்தனுக்கு தமிழ் ஈழம் கடமைப்பட்டுள்ளது. அவர்பணி இன்னும் பல துறைகளில் பரவுவதாக. அவர் முயற்சி வெல்க!

**வாழிய செந்தமிழ்! வாழிய நற்றமிழர்!**

அ. அமிர்தலிங்கம்
(பாராளுமன்ற உறுப்பினர்)

19693.

## "மகாகவி" மொழிவது:

இந்த எழுத்தர் எனக்குந்
தெரிந்தவர் தான்;
விந்தை மனிதர்; விறுவிறென்று
காரியங்கள்
செய்ய நினைப்பார்; செயலற்ற
மக்களினை
வைவார்; அவர்க்கு வழி ஏதும்
காட்டுதற்கு
முன்னோடித் தேடி முயல்வார்;
முதியவர்கள்
இன்னாரிடம் படிக்க எத்தனையோ
உள்ளது.
பேச்சினிலும் வல்லவர்; பேசுவதை
அச்சடித்து
மூச்சுள்ள வாசகமாய் இன்றுமக்கு
முன் வைத்தால்,
என்னுடை சொற்கள் இடையில்
எதற்காக
முன்னுரையாய்? போங்கள், முழுதும்
படியுங்கள்!

— "மகாகவி"

19693

## முன்னுரை.

தம்மவரில் ஒருவர் தலைசிறந்தவராய் இருப்பினும், அன்னவரைப் போற்றாது, புகழ்ந்துரைபாடாது வேற்று நாட்டவரை, வேற்றினத்தவரை வாழ்த்தி வழுத்துகிற குறை தமிழ் இனத்தின் நிலைத்த ஓர் பெருங் குறையாக விளங்குகிறது. ''அரியவற்றுளெல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்'' என்ற வள்ளுவர்வழி நின்று உலகப் பெருமக்களை தமராகப் பேணுதல் தவறல்ல ஆனால் தம்மினத்திற் தோன்றித் தம்மினத்திற்காக, தம் மொழிக்காகத் தம் தாயகத்திற்காக ஓயாது உழைத்து உருக்குலைந்த சான்றோரைப் போற்றவேண்டியளவு போற்றாது வாளாக்கிடக்கிறது நம் தமிழினம். இதைத்தான் ஒரு தேசபக்தன் ''கலைஞர்களைக், கவிஞர்களை நாட்டுக் குழைத்த நல்லவர்களைப் போற்றாத நாடு காரிருட்காடு கண்டீர்'' என்று கண்ணீர் சொரிந்து கூறிப்போந்தான்.

''இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்'' என இறுமாப்போடு இயம்பி, ''பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே'' என நம்பி நாட்டிற் குழைத்த நன்மகன் திரு. வ. உ. சியின் பணியைத் தாயகத் தமிழ் மக்கள் பலர் ஒரு காலத்தில் பெருமளவு மறந்திருந்தனர். அவர்கட்கு அன்னவரின் பல்துறைப்பட்ட பணியின் பாங்கினை தனது எழுத்திலும் பேச்சிலும் எடுத்துக்காட்டி மக்கள் மனதில் அன்னார் பெருமை அழியாது நிலைத்து நிற்க வழிவகுத்தார் கிராமணியார். எனினும் ஈழம் வாழ் தமிழ் மக்கள் பலர் இன்னும் கப்பலோட்டிய தமிழன் யார்? செக்கிழுத்த செம்மல் யார்? என்று கேள்வி கேட்கும் நிலையில்தான் இருக்கின்றார்கள். இந்த வருந்தத்தக்க நிலையை ஓரளவு போக்கி, வ. உ. சியின் வாழ்வு குறிப்பாகக் கப்பலோட்டிய அவரின் வீரம்செறிந்த

வரலாறு, காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை, வல்வெட்டித் துறை, பருத்தித்துறை, கொழும்புத்துறை, திருமலைத் துறை, முதலிய பல துறைமுகங்களை தன்னுள் அடக்கி விளங்கும் கடல்சூழ் ஈழவள நாட்டில் வாழும் தமிழினத்திற்கு தக்கதோர் வழிகாட்டியாக அமையட்டும் என்ற விடுதல் அறியா விருப்போடு இச் சிறுநூலினை வெளியிடுகின்றேன். ஈழம் வாழ் தமிழ் மக்கள், இந்நூலின் உட்பொருளை உய்த்துணர்ந்து உயர்வாழ்வு எய்வார்களென எண்ணுகின்றேன். இந்நூலின் உள்ளடக்கம் சுருக்களவில் வ. உ. சியின் நினைவுநாட் கட்டுரையாக 18—11—61 - ல் வீரகேசரி, தினகரன், செய்தி இதழ்களில் வெளிவந்தது என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

இச் சிறுநூலுக்கு அணிந்துரை அளிக்குமாறு அறிஞர் அண்ணு அ. அமிர்தலிங்கம், பா. உ. அவர்களை அன்போடு வேண்டியபோது "ஆம்" எனத் தனக்கே உரிய தனிப் புன்னகையுடன் உடன்பாடு தெரிவித்து உள்ளம் கொள்ளைகொள்ளும் முறையில் அணிந்துரை அளித்து அருந்தமிழினம் ஆக்கத்துறையில் ஈடுபடுமாறு ஊக்குவித்தமைக்கு என் உளம் கனிந்த நன்றி.

**வாழ்க கப்பல் ஓட்டிய தமிழன் !**

**வாழ்க கடல் சூழ் ஈழத்தமிழ் மக்கள் !!**

**வாழ்க வையக மெல்லாம் !!!**

வணக்கம்.

அன்பன்

''ஈழவேந்தன்''

## கப்பலோட்டி — செக்கிழுத்த செம்மல்

# வ. உ. சி.

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 6 - 9 - 1872 | 18 - 11 - 36 |

வரலாற்றில் இவருக்கு இடமுண்டு.

இந்தியத் துணைக்கண்டத்தின் விடுதலைப்போராட்ட வரலாற்றை நடுநிலை நின்று ஆராய்கின்ற எந்த வரலாற்று நூலாசிரியனும் செந்தமிழர் செல்வம் - செக்கிழுத்த செம்மல் - தென்னகத்துத் திலகர் - கப்பலோட்டிய தமிழன் என எம்மனோரால் வாழ்த்தி வழுத்தப்பெறுகின்ற திரு. வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்களுக்குத் தான் வரைகின்ற வரலாற்று நூலில் தனியிடம் ஒதுக்காதுவிட முடியாது. காரணம் திரு. வ. உ. சியின் பல்துறைப்பணி குறிப்பாக இந்திய விடுதலை இயக்கத்திற்கு அவர் ஆற்றிய நிலையான பணி மூடிமறைக்க முடியாத பணி.

மா. பொ. சியின் மாபெரும் பணி.

பலகாலமாக திரு. வ. உ. சியின் பல்துறைப்பணியின் பாங்கினை இந்திய மக்கள் மறந்திருந்தனர். இந்த நன்றி மறந்த செயல் எவ்வளவு இரக்கமற்ற - இதயமற்ற செயல் என்று எடுத்துக்கூறி பொதுவாக இந்திய மக்களையும், குறிப்பாக தாயகத்து தமிழ் மக்களையும், இவரின்

அறிக்கைகள் வெளியிட்டு, ஆங்கில மக்களின் மனத்தை நல்ல முறையில் திருப்பி படிப்படியாக இந்திய விடுதலைக்கு வழிகோல வேண்டும் என்பது கோகாலேயின் கருத்து. இதனால் இவரை தலைசிறந்த அரசியல் சட்டத்துறை வல்லுனர் என்றும், மிதவாதி என்றும் அழைக்கப்பட்டார். முன்னவரின் கொந்தளிக்கும் உள்ளம் கொள்கை, கோட்பாடு ஆகியவை திரு. வ. உ. சி. யின் உள்ளத்தை ஆட்கொண்டது. அதனால் திரு. வ. உ. சி. திலகரைத் தனது அரசியல் குருவாக ஏற்றார். கோகாலேயின் அமைதி உள்ளம் சட்ட நுணுக்கம் காந்தி அடிகளை ஆட்கொண்டது. காந்தி அன்னவரை தனது அரசியல் குருவாக ஏற்றார். எனினும் அன்றைய சூழ்நிலையில் திலகர் தான் கோகாலேயிலும் பார்க்க இந்திய மக்களின் குறிப்பாக வடநாட்டு மக்களின் மனதைக்கவர்ந்த மாபெரும் வீரனாக, தலைவராக விளங்கினார். அதேபோன்று திலகரின் சீடராய் தென்னக மக்களின் உள்ளம் எல்லாம் நிறைந்து அவர்களின் உணர்ச்சிகளை தனது கனல்கக்கும் பேச்சுக்களால் தட்டி எழுப்பினார் திரு. வ. உ. சி. அவர்கள்.

## கப்பல் ஓட்டிய தமிழன்.

இக்காலத்தில் திரு. வ. உ. சி. யின் உள்ளத்தை உறுத்திய பெரும் கேள்வி எப்படி ஆங்கிலேயரின் கடல் ஆதிக்கத்தை கைப்பற்றுவது என்பதேயாகும். ஆங்கிலேயர் இந்திய துணைக்கண்டத்தை ஆதிக்க வெறியோடு ஆளுவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்திருப்பது அவர்களின் கடல் ஆதிக்கம் என்பதை நன்கு உணர்ந்தார். இந்த கடல் ஆதிக்கத்தை கைப்பற்றினால்தான் ஆங்கிலேயர் அடிபணிவர் அத்துடன் இந்தியாவின் அடிமை விலங்கும் அறுபடும் என்பதும் வ. உ. சியின் தீர்க்கமான முடிவு. அன்று வாழ்ந்த எந்த இந்திய அரசியல்வாதிக்கும் தோன்றாத இந்த அரும் பெரும் சிந்தனையை செயற்படுத்தும் நோக்குடன் அன்று முழு உரிமையுடன் விளங்கிய ''பிரிட்

19693



டிஷ் இந்திய ஸ்டீம் நவிகேசன் கம்பெனி [British Indian Steam Navigation Company] என்ற ஆங்கில கம்பெனிக்கு எதிராக 'சுதேசிக் கப்பல் கம்பனி'' ஒன்றை 1906ம் ஆண்டு தூத்துக்குடியில் தொடக்கினார். பின்பு பல நண்பர்களின் துணைகொண்டு எஸ். எஸ். லாவோ, எஸ். எஸ். காலியோ என்ற இரு கப்பல்களை பம்பாயிலிருந்து விலைக்குப்பெற்று வந்து இந்தியாவிற்கும் ஈழத்திற்கும் இடையில் கப்பல் போக்குவரத்தை நடாத்தினார். இந்நிகழ்ச்சி ஆங்கிலேயரை கதிகலங்கச் செய்தது. தம் ஆட்சி ஆட்டம் காண்பதற்கு இது அறிகுறியாய் அமைந்துவிட்டதை அவர்கள் நன்கு உணர்ந்தார்கள். அவர்களின் அவல நிலையை ''ஓட்டம் தாங்கள் எடுக்கவென்றே கப்பல் ஓட்டினாய், பொருள் ஈட்டினாய், தொண்டொன்றே தொழிலாகக் கொண்டிருந்தோரை தூண்டினாய், புகழ் வேண்டினாய், கண்ட கண்ட தொழில் கற்க மார்க்கங்கள் காட்டினாய், சோர்வை ஓட்டினாய்,'' என அவர்கள் ஆத்திரம் கொண்டு அலறுவதாய் கவி பாரதி மொழிந்த கருத்துக்களே சிதம்பரம்பிள்ளையின் செயற்றிறனை விடுதலை வேட்கையை எடுத்துக்காட்டப் போதுமானது, திரைகடல் ஓடித் திரவியம் தேடிய நம் மூதாதையரின் வழிவந்த வ. உ. சியின் உள்ளம் வேறு எப்படித்தான் அமைய முடியும்.

## ஆங்கிலேயரின் அடக்கவொண்ணா ஆத்திரம்.

இப்படி இந்திய அரசியல் அரங்கிலேயே பெரும் அதிர்ச்சியை புரட்சியை ஏற்படுத்திய வ. உ. சியை எப்படியும் அடக்கியே தீருவது என முடிவுசெய்த ஆங்கில அரசாங்கம் பல சதிவேலைகளில் ஈடுபட்டு எப்படியும் இவரை சிறையில் தள்ளினாற்றான் தமக்கு வாழ்வு உண்டு எனக் கருதி தக்கதருணத்தை எதிர்பார்த்து இருந்தது.

## வ. உ, சியின் வீர உரை,

ஆனால் எதற்கும் அஞ்சா வ. உ. சி. அவர்கள் சுதந்திர உணர்ச்சியைத் தொடர்ந்து மக்களிடம் பரப்பும் நோக்குடன் 1908ம் ஆண்டு திருநெல்வேலியில் "தேசாபிமான சங்கத்தை" நிறுவினர், அதே ஆண்டு பங்குனித் திங்கள் (மார்ச்) 9ம் நாள் வங்கத்தில் தலைசிறந்த தலைவராய் விளங்கிய விபினசந்திரபாலர் சிறையில் இருந்து வெளிவந்தார். இந்நிகழ்ச்சி இந்தியா எங்கும் கொண்டாடப்பட்டது, திருநெல்வேலியிலும் கொண்டாட இவர் ஒழுங்கு செய்தார். அன்று வரியிறுப்போராக (கலெக்டர்) கடமையாற்றிய திரு. விஞ்சி அவர்கள் கூட்டங்களோ ஊர்வலங்களோ நடத்தக்கூடாது என தடைஉத்தரவு விட்டிருந்தார். அனைத்தையும் மீறி வ. உ. சியும் சுப்பிரமணிய சிவாவும் மாபெரும் கூட்டத்தில் ஆங்கிலேய ஆட்சியின் அட்டூழியத்தை எதிர்த்து உரிமைக்குரல் எழுப்பினர்கள்,

## சிறையில் செக்கிழுத்த செம்மல்,

மேற்கூறிய இச்செய்கை விஞ்ட் துரைக்கு பெரும் ஆத்திரத்தை ஊட்டிற்று. அவர் இவ் இருவர்களையும் அழைத்து அவர்கள் செய்கைக்கு மன்னிப்புக் கோரும்படியும் இனிமேல் அரசியலில் ஈடுபடமாட்டோம் என வாக்குறுதி அளிக்கும்படியும் கட்டளையிட்டார். இந்த மிரட்டலுக்கு திரு. வ. உ. சி. மருந்தளவும் பணிய மறுத்தார். உடனே அரச நிந்தனை எனக் குற்றம் சாட்டப்பெற்று இருபது ஆண்டுகளும், சுப்பிரமணிய சிவாவுக்கு உடந்தையாக இருந்ததற்காக மேலும் இருபதாண்டுகளாகச் சேர்த்து நாற்பது ஆண்டுகள் சிறையில் வாழவேண்டும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. இத்தீர்ப்பைக் கேட்டு இந்திய மக்கள் கொதித்தெழுந்தனர். செய்தி இதழ்கள் சீற்றம்கொண்டு தலையங்கங்கள் தீட்டின. கண்டனச் செய்தித் தலைப்புகளை வெளியிட்டன. பின்பு சென்னை உயர் நீதி மன்றத்திற்கு



விடுத்த வேண்டு கோளிற்கு (Appeal) இணங்க பத்தாண்டுகளாகக் குறைக்கப்பட்டது. இறுதியில் லண்டன் உயர்நீதி மன்றம் [Privy Council] ஆறு ஆண்டுகளுக்குத் தண்டனையைக் குறைத்தது. வ. உ. சி. சிறையில் பட்ட துன்பங்கள் சொல்லில் அடங்கா. உப்பில்லாக் கூழ் உண்டார். செக்கிழுக்கச்செய்து. சித்திரவதை செய்யப் பட்டார். அவர் சிறையில் பட்ட அல்லல்களை நாமக்கல் கவிஞர் பின்வருமாறு நெஞ்சம் நெகிழ்ந்து உருகும் முறையில் பாடுகின்றார்.

**"எல்லாரும் தேசபக்தர் இந்தநாளில்**
**எத்தனையோ சிறைவாசம் இனிதாய்க்காண்பார்**
**சொல்லாலும் எழுத்தாலும் விளக்கவொண்ணாத்**
**துன்பமெல்லாம் சிறைவாசம் அந்நாளில்**
**வல்லாளர் சிதம்பரனர் சிறையிற்பட்ட**
**வருத்தமெல்லாம் விரித்துரைக்கில் வாய்விட்டேங்கி**
**கல்லான மனத்தவரும் கண்ணீர் சொட்ட**
**கனல்பட்ட வெண்-ணெயெனக் கரைவார் இன்றும்"**

இது கவிஞரின் வெறும் கற்பனையல்ல, ஆனால் கற்பனைக்கு அப்பாற்பட்ட சொற்களில் வடித்துத் தர முடியா கடுந்துயரை வ. உ. சி. அவர்கள் சிறையில் பட்டார் என்பதை மட்டும் நாம் நினைவில் வைத்தல் நலம்'

## தொழிற்சங்க இயக்கத்தின் தலைவர்.

திரு. வ. உ. சி. அவர்கள் தலைசிறந்த வழக்கறிஞர். தன் தொழிலையே அற்பணித்து அரசியலில் குதித்த

அப்பெருமகன் அரசியல் துறையில் மட்டும் பணியாற்றுவதோடு நிறைவடையவில்லை. தொழிலாளர் துயர் துடைத்து அவர் நலம் பேணி, வாழ்வு வளம்பெற அரும்பாடு பட்டார். ஹொர்வி (Harvy) தொழிற்சாலை முதலாளிகள் அங்கு தொழில் புரிந்த தொழிலாளர்களை அடக்கி ஒடுக்கி வேலைபெற முயன்றனர். ''பாடுபடுவோருக்கே இந்த பாரிடம் சொந்தம் ஐயா'' என்று கவிமணி பாடியிருப்பினும் பாடுபடுகிற பாட்டாளிகள் பயன்பெறாது படுதுயர் பட்டனர் இந்தப் பாட்டாளிகளை வ. உ. சி. அவர்கள் வேலைநிறுத்தம் செய்யச் செய்து வெள்ளை முதலாளிகளைப் பணியச் செய்தார். இந்த வேலைநிறுத்தம்தான் இந்தியாவில் முதன் முதலாக வெற்றிகண்ட வேலைநிறுத்தம் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. இதனால் எட்டுமணி நேரத்துக்கு மேல் தொழிலாளர்கள் வேலைசெய்யத்தேவையில்லை என்ற சட்டத்தையும் நடைமுறைக்குக் கொண்டுவர துணைபுரிந்தது.

''ஓடப்பராய் இருக்கும் ஏழையப்பர்
உதையப்பராகி விட்டால் ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்ப ராகிவிடுவார் உணரப் பாநீ.''

என்று புரட்சிக்கவி பாரதிதாசனின் உள்ளக்குமுறல் திரு. வ. உ. சியின் செம்மை சான்ற செயலால் சிறப்புற்றது - மெய்யுற்றது என்று எண்ணும்போது எம் இதயம் இறும்பூதெய்துவதை எவர்தான் தடுக்கமுடியும். மேலே குறித்த இந்நிகழ்ச்சியைத் தவிர இன்னும் பல இடங்களில் வழக்கறிஞர் வ. உ. சியும், தமிழ் அறிஞர் திரு. வி. க. வும் பல தொழிற்சங்கங்கள் நிறுவி ஆற்றிய பணி தொழிலாளர் நெஞ்சில் அவர்களுக்கு நிலையான இடத்தைத் தருவது உறுதி. உண்மையிலேயே திரு. வ. உ. சி. உள்ளம் கசிந்துருகி இட்ட தொழிற்சங்கவித்தே விழுது பலவிட்டு பெருமரமாய் இன்று வெவ்வேறு கிளைகளுடன் விளங்கக்கண்டு வியப்புறுகின்றோம்.



**சீர்திருத்தச் செம்மல்,**

தீண்டாமை என்னும் தீய வழக்கம் தீந்தமிழ் இனத்தை வாளா அறுக்கின்ற கொடுமை இன்று ஓரளவு குறைந்திருப்பினும் இன்னும் முற்றாகத் தீர்ந்தபாடில்லை. ஆனால் இத்தீண்டாமையை அன்றே பேச்சிலும், செயலிலும் எதிர்த்த செம்மல் வ. உ. சி அவர்கள். தாழ்ந்த வகுப்பினர் என்று கருதப்பட்ட கண்ணிழந்த துறவி இராமையாதேசிகரை தனது இல்லத்திலேயே வைத்து அன்போடு பேணிக் காத்தார் அத்துடன் கலப்புமணம், விதவை மணம் பல வற்றை தானே தலைமைதாங்கி உள்ளத்தில் உவகைபொங்க நிறைவேற்றி வைத்தார்.

**வறுமைப்பிணி வாட்டல்,**

சிறை சென்று மீண்ட செம்மல் வ. உ. சி. அவர்கள் அதன்பின் பெருமளவு அரசியலில் பங்கு கொள்ளாது தொழிற்சங்க, சீர்திருத்தத்துறைகளிலும் குறிப்பாக இலக்கியம், சமயம் முதலியவற்றிலும் ஈடுபட்டு பணியாற்றினார். திரு. வ. உ. சி. சிறை வாழ்வையடுத்து அரசியலில் தீவிர பங்கு எடுக்காததற்கு இரண்டு முக்கிய காரணங்கள் கூறலாம். ஒன்று தன் குடும்பத்தையே தான் தாங்க முடியாத பொருளாதார நெருக்கடி அவரைச் சூழ்ந்தது. ஆம் வழக்கறிஞர் தொழில் புரிந்து பெரும் பொருள் திரட்டிய வ. உ. சி. சிறைபுகுந்து மீண்ட பின்தன் வாழ்வை நடாத்த நெய்யும், நெல்லும், மண்ணெண்ணெய்யும் மற்றும் இன்னோரன்னபொருட்களை விற்றுப்பணம் தேட வேண்டியிருந்தது நாட்டுக்கு உழைத்த நல்லவரை, திரைகடல் ஓடி திரவியம் தேடமுயன்றவரை காப்பாற்ற மறந்த நன்றிகெட்ட தமிழகத்தின் பண்பில் இதுவும் ஒன்று. திரு. வ. உ. சி. அவர்களின் துயர் தோய்ந்த நிலை எத்தகையது என்பதை அறிய அவர் கவிதை வடிவில் தன் நண்பருக்கு வரைந்த கடிதமே சான்றாய் அமையும். இதோ அக்கவிதை:

"வந்த கவிஞர்க்கெல்லாம்
மாரியெனப் பல்பொருளும்
தந்த சிதம்பரன் தாழ்ந்தின்று
சந்தமில் வெண்
பாச்சொல்லிப் பிச்சைக்குப்
பாரெல்லாம் ஓடுகின்றான்
நாச்சொல்லும் தோலும் நலிந்து."

### அரசியல் துறவும் அண்ணல் காந்தியின் வருகையும்.

அரசியலில் இருந்து பெருமளவு அவர் விலகிய தற்கு அடுத்த ஓர் காரணம் காந்தியடிகளுக்கு அரசியல் உலகில் பெரும் செல்வாக்கு ஏற்பட்டதேயாகும். காந்தி அடிகளின் உளப்பண்பை, ஒழுக்கநெறியை வ. உ. சி. உளம் குழைந்து போற்றினார். ஆனால் அவர் விடுதலைபெறக் கையாண்ட அரசியல் நடவடிக்கைகளில் இவருக்கு நம்பிக் கையில்லை. குறிப்பாக காந்தி அடிகளின் அறப்போராட்ட முறை ஒத்துழையாமை இயக்கம் சக்கரத்தில் நூல் நூற் றல் முதலியவற்றில் இவர் உள்ளம் ஈடுபட மறுத்தது "வாளேந்திய தமிழன் நூலேந்துவதா? என்பது இவர் கேள்வி. திலகரின் அரசியல் மாணவன் கோகாலேயின் அரசியல் மாணவரின் கொள்கையோடு ஒத்துப்போகாதது வியப்பல்லவே.

### தமிழ் உணர்ச்சியும் நகைமை சார்ந்த இலக்கியப் பணியும்.

தமிழ் உணர்வில்லாத் தமிழ்த்தலைவர்கள் அன்று தென்னகத்தில் பலர் இருந்தனர். இன்றும் சிலர் இருக்கின் றனர். ஆனால் வ. உ. சி. அவர்களோ தமிழை உணர்ந்த தமிழிலே தேர்ந்த தமிழ் அறிஞராய் விளங்கினார். அவர் எழுதி வெளியிட்ட நூல்கள் மெய்யறிவு, மெய்யறம், சுய



சரிதை, தனிப்பாட்டுத் திரட்டு முதலியன அத்துடன் ஜேம்ஸ் ஆலன் ஆங்கிலத்தில் எழுதிய ஆன்மிக நூல்கள் பலவற்றை தமிழில் மொழிபெயர்த்தார். திருக்குறள் தொல்காப்பியம், சிலப்பதிகாரம், முதலிய நூல்களில் இவருக்குத் தனி ஈடுபாடு. திருக்குறளுக்கு பரிமேலழகர் எழுதிய உரையை இவர் போற்ற மறுத்தார். மாறாக மணக்குடவர் உரையை இவர் வியந்து போற்றி அந்த உரையோடு வெளிவந்த திருக்குறளை பலதடவை பதிப் பித்து வெளியிட்டார். அத்துடன் தானும் திருக்குறளுக்கு உரை எழுதினார். எனினும் அது அச்சிடப்பட்டு வெளி வந்ததாக அறிகுறியில்லை. தொல்காப்பியத்தின் எழுத்த திகாரம், பொருளதிகாரப் பகுதிகளுக்கு திரு செல்வகேச வராய முதலியார் பேராசிரியர் வையாப்புரிப்பிள்ளை ஆகி யோரின் துணைகொண்டு புத்துரை எழுதி வெளியிட்டார். இக்கட்டுரையாளர் விரும்புகின்ற அளவு மொழித்தூய் மையை இவரின் நூல்களில் காணமுடியாது எனினும் எளிமை, உணர்ச்சி வேகம், சிந்தனைத்தெளிவு, எதனையும் தன் நிலையில் இருந்து பார்க்கின்ற தனித்தன்மை [Individuality] முதலிய சிறப்பியல்புகளை இவரின் நூல்களை நுகர்வோர் சுவைக்காது இருக்க முடியாது.

### வேதாந்தத்தை வெறுக்காத சித்தாந்தி.

இனி அவரின் சமயக் கொள்கையைப் பற்றியும் சிறிது ஆராய்தல் சிறப்புடைத்து. வேதாந்தத்தை வெறுக் காது சித்தாந்தத்தில் ஊறித் திளைத்தவர் சிதம்பரனார். தாயுமானவர்போல் மேற்கூறிய இரண்டு சமயக்கோட்பாடு களுக்கும் நெருங்கிய ஒற்றுமையைக் கண்டார். அத்தோடு நாத்திகர் வழுத்துகின்ற இயற்கை வழிபாடும், ஆத்திகர் அறைகின்ற இறைவழிபாடும் ஏறக்குறைய ஒருபொருளைக் குறிக்கும் இறைவழிபாடே என்று கூறி இருசாராருக்கும் இடையில் இதய இணைப்பைக்காண முயன்றார். மேலே குறித்த இவரின் கருத்துக்களின் விரிவை இவர் சிவஞான போதத்திற்கு எழுதிய உரையில் கண்டு கொள்க. அவர்

இறப்பதற்கு முன் ஆற்றிய இறுதிப் பணி சிவஞான போதத்திற்கு உரை எழுதியதே என்பது ஈண்டு குறிப் பிடத்தக்கது.

## பண்புள்ள பேச்சுத் திறமை.

உடல் சிலிர்க்க, உயிர் நிமிர்ந்து உணர்ச்சி பொங்க, உள்ளமெல்லாம் நெக்கு நெக்காய் உருக வீர உரை நிகழ்த்தி, மக்களைத் தட்டியெழுப்புவதில் வ. உ. சி வல்லவர். ஆம்! மக்களின் எலும்பையே துடிக்கவைக்கும் ஆற்றல் வாய்ந்தவை அவரின் சொற்கள் என்பது பல அறிஞரின் முடிவு. வீர ஆவேசத்தோடு வ. உ. சி. சொற் பொழிவுகள் நிகழ்த்தினாலும் எவரையும் தேவையற்று வைவதை அவர் விரும்பவில்லை. "யாரையும் வையாதே. வைவது தமிழன் பண்பு அல்ல எவன் வைதாலும் வைப வன் முன்னேற முடியாது என்பதை நம்பு." என்று அறி ஞர் சி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு அவர் அறைந்த அறிவுரை அவர் உள்ளக் கிடக்கையை எடுத்துக் காட்டுகிறது. "இனிய உளவாக இன்னாத கூறல், கனியி ருப்பக் காய் கவர்ந்தற்று" என்றும் "யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" என வள்ளுவர் வரைந்த கருத்துக்கள் எவ்வளவு தூரம் வ. உ. சியை ஆட்கொண்டுள்ளது என்பதை மேலே கூறிய அவரின் அன்புரையால் அறிகின்றோமன்றோ.

## கணக்கிட முடியாத பணி வ. உ. சியின் பணி

சுருங்கக்கூறின் வ. உ. சி. அவர்கள் தலைசிறந்த வழக்கறிஞராய், இந்திய விடுதலைக்கு வித்திட்ட பெரு மகனாய், தமிழ்மீது தணியாத காதலனாய், இலக்கிய இன் பச் சுரங்கமாய், தொழிற்சங்க இயக்கத்தின் தந்தையாய் பாட்டாளியின் கூட்டாளியாய், கப்பலோட்டி ஆங்கிலேய ரின் ஆட்சியின் ஆணிவேரை அறுத்து எறிந்த ஆண்மை



னாய், திரைகடல் ஓடித்திரவியம் தேடிய நம்பண்டைத் ழரின் பாங்கான வழித்தோன்றலாய், சிறைசென்று சக்கிழுத்த செம்மலாய், சீர்திருத்தவாதியாய் சித்தாந் தத்தின் சிறப்புணர்ந்த சிவநெறிச் செல்வராய், சாதி வெறிக்கு சாவுமணி அடித்த சான்றோனாய், பண்புடைமை யின் திருவுருவாய், சொற்கொண்டலாய், கரைகாணாது கதிகலங்கிய எம் இனத்தின் கலங்கரை விளக்கமாய் விளங்கி வீறுபுகழுடன் வாழ்ந்தவர் எம் வ. உ. சி. அவர்கள் அன்னா ரை பின்வரும் முறையில் கவிமணியவர்கள் கசிந்துருகி வாழ்த்துகிறார்.

"கப்பலை ஓட்டிக் கடுங்காவல் தண்டனையில்
உப்பிலாக்கூழ் உண்டுடல்மெலிந்தோன்-ஒப்பிலாச்
செந்தமிழ்ச் செல்வன் சிதம்பரனை அன்போடு
சிந்தனைசெய் நெஞ்சே தினம்."

நாமும் கவிமணியின் கருத்துவழி நின்று சிதம்பரனா ரை சிந்தை நிறைவோடு வழுத்தி, வாழ்த்தி வளமான வாழ்வுபெற வழி செய்வோமாக. வழுத்துபவர் வழுத்தி னால் வ. உ. சி. யின் இன்னுயிரும் எம் இன எழுச்சிக்கு வளர்ச்சிக்கு வழிகாட்டுவது உறுதி.

வாழ்க சிதம்பரனார் புகழ் !

வாழ்க திரைகடல்ஓடித் திரவியம் தேடியதமிழர் பண்பு !

வாழிய வையமெலாம் !

19693

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூல



ஞான
குறிப்

# ஈழத் தமிழர் இதய கீதம்.

''வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி வாழிய வாழியவே
வானமளந்தது அனைத்தும் அளந்திடும் வண்மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி இசைகொண்டு
வாழியவே

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி என்றென்றும்
வாழியவே

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத் துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லையகன்று சுடர்க தமிழ் நாடே.''

ஈழத் தமிழ் நாடு இசை வாழும் பொன்னாடு
இயல் இசை நாடகம் அறம் பொருள் இன்பம்
இலங்கும் எம் தமிழ் நாடு - எங்கள் (ஈழத்)

இமயத் தலையில் தமிழ் ஒலித்தான் - எங்கள்
ஈழத்து அரசன் இசை அமைத்தே
இன்ன முதிசையால் யாழ் மீட்டி - எங்கள்
முன்னவன் ஒருவன் புகழ் சமைத்தான்
இசையினைப் போலே உலகினில் வேறே
இலை அதைத் தொகுத்தான் ஒரு புலவன்
இசையாலே தோன்றி இசையாலே வாழ்ந்து
இசையோடு உயிர் ஓம்பும் தாய்நாடு (எங்கள்)

மீன் மகள் பாடும் மணிவாவி மட்டு
நகர் வலம் மேவி கொலு இருப்பாள்
திஞ்சுவை என வெண்நீருற்று - எங்கள்
திருமலை தனிலே திகழுகின்றுள்
திருமலை போலே துறைமுகம் வேறே
தேயங்களுளதோ இயல்பாலே
திகழ்கின்ற குன்றின் இரைகின்ற சங்கின்
திரைவந்து மோதும் தாய்நாடு - எங்கள்

வன்னி நாட்டின் வளம் கொழிக்க - எங்கள்
வண்டமிழ் வீரர் ஏர் பிடிப்பார்
மன்னார் கடலின் முத்தெடுத்து - எங்கள்
மானத் தமிழர் வடமமைப்பார்
மலைகளின் மேலே வளர்பயிராலே
மலை வாழ்தமிழர் வாழ்வளிப்பார்
மறங்கொண்ட நெஞ்சில் அறங்கண்டு விஞ்சி
புறங்கொண்டு வாழும் தாய்நாடு - எங்கள்

யாழ்நகர் பிறந்து தமிழ் காத்தான் - எங்கள்
நாவலர் இறவாப்புகழ் போத்தான்
ஞானத்திறவின் மொழி ஆய்ந்தே - எங்கள்
ஞானப்பிரகாசன் தமிழ் வளர்த்தான்
கலைக்குயில் போல் இஸ்லாமிய மாதர்
கவிகளில் கன்னித் தமிழ் இசைத்தார்
கலையாத சொத்து இசையாழ்நூல்வித்து
விபுலானந்தன் தந்த புகழ் ஏடு - எங்கள் ஈழத்
(தமிழ் நாடு'')

---

முதற்பதிப்பு: 1000

ஆண்டு: 1962

வெளியிடுபவர் :

மா. க. கனகேந்திரன்

16, சுவிசுத்தாராம வீதி, வெள்ளவத்தை.

பதிப்பு : யாழ்ப்பாணம் மெய்கண்டான் அச்சியந்திரசாலை